திரு. என். எஸ். வி. சித்தன் : தலைவர் அவர்களே, முதலமைச்சர் அவர்கள் கூறிய பதிலில் 10 ஆண்டுகளுக்கு மேல் சென்னையில் துணை ஆணையர் இல்லை என்று சொன்னார்கள். பொதுவாகக் காவல் துறையில் 3 ஆண்டுகளுக்கு மேல் ஒருவர் ஒரு இடத்தில் இல்லாமல் இருக்கும் முறை இருந்தது. அந்த முறையைத் தொடர்ந்து பின்பற்ற ஆவன செய்யும் உத்தேசம் இருக்கிறதா?

மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை : மூன்று ஆண்டுகளுக்கு மேல் இருக்கக் கூடாது என்ற விதி இல்லை. பொதுவாக மூன்று ஆண்டு களுக்கு மேல் அவர்களை வேறு இடங்களுக்கு அனுப்புவது பழக்கத்தில் இருந்துகொண்டு வருகிறது. சில தேவைகளை உத்தேசித்து சில அதிகாரிகள் மூன்று ஆண்டுகளுக்கு மேலும் இருந்துகொண்டு வருகிறார்கள்.

* 12. *Q*.—THIRU G. GOMATHISANKARA DIKSHIDAR: Will the Hon. the Chief Minister be pleased to state the number of Police Officers of this State deputed to serve the border Police as on 31st August 1967 categorywise ?

மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை : இவ்வினாவுக்கு விடை அளிப்பது பொது நலனுக்கு ஏற்றதல்ல என்று அரசாங்கம் வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்ளுகிறது.

State Transport

* 212 *Q*.—THIRU K. VINAYAKAM : Will the Hon. the Minister for Public Works be pleased to state whether it is proposed to constitute a Committee of private bus operators to advise the Government on the working of the State Transport system ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : இல்லை.

திரு. கே. விநாயகம் : சார், சரியோ, தப்போ, நம் பேருந்து வண்டி களை எல்லாம் நடத்துவது என்று அரசாங்கம் ஏற்றுக்கொண்டுவிட்டது. அந்த நேரத்தில், அரசாங்கத்தைவிடத் தனிப்பட்டவர்களுக்கே அதிகமாக அனுபவம் இருக்கிறது, நல்ல முறையில் லாபமும் சம்பாதிக்கமுடியும், அதே நேரத்தில் பொதுமக்களுக்கும் நல்ல பணி செய்யமுடியும், இந்தத் துறையில் என்று கருதப்படுகிறது. நான் பேசிய பேச்சுக்குப் பிறகுதான் அமைச்சரவர்கள் எங்கோ ஒரு இடத்தில் ப்ரெஸ் ஸ்டேட்மெண்ட் விட்டார் கள். தனியார் முதலாளிகளை வைத்து அவர்கள் அனுபவத்தைப் பெற்று அவர்கள் யோசனையையும் கேட்டு நம்முடைய சர்க்கார் பஸ்களை நல்ல முறையில் ஒழுங்காக நடத்துவதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்யலாம் என்று அமைச்சரவர்கள் சொன்னதாகப் பத்திரிகையில் நான் பார்த்தேன். அது உண்மையா? அப்படி இருந்தால் அதற்கு வேண்டிய நடவடிக்கை எடுக்க ஒரு போர்ட் ஆ.ஃப் ப்ரைவேட் ஆபரேடர்ஸ் போடுவதில் என்ன தப்பு இருக்கமுடியும்? அது நமக்குத்தானே லாபம், அதனால் நாம் என்ன குறைந்தா போவோம்? நம்மைவிட அவர்கள் பெருத்த அனுபவ சாலிகள் என்று அவர்களுக்குப் பெயர் போகுமா என்பதுபற்றி விளக்க வேண்டுகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : இந்தச் சொற்பொழிவுக்கு ஒரே ஒரு பதில்தான் தனியார்துறை முதலாளிகள் அனைவரையும்கொண்ட ஒரு தனிப்பட்ட குழு அல்லது தனியார் துறையில் இருக்கிற அதிபர்களை நாம் அமைக்கிற பல்வேறு குழுக்களில் இடம் பெறச் செய்வது என்ற அடிப் படையில் ஒன்றிரண்டு குழுக்கள் அமைக்கப்பட்டு இருக்கின்றன.

1968 மார்ச் 14]

DR. H. V. HANDE : Sir, when the Members of the present Government were in the Opposition, they were making a number of charges pinpointing the exact reasons for the loss in the State Transport. After this Ministry has come to power, have they found out where exactly the losses occurred and have they succeeded at least to a certain extent in plugging the loopholes ?

THE HON. THIRU C. N. ANNADURAI : We are in the process of finding out the loopholes and also in plugging them.

லாரி விபத்துகள்

* 213 வினா—திரு. வி. கே. கோதண்டராமன்:
திரு. சி. கோவிந்தராஜன் : } மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1960 முதல் 1966 வரை இரவு நேரத்தில் லாரிப் போக்குவரத்து காரணமாக எத்தனை விபத்துகள் ஏற்பட்டன?

(இ) அதனால் எத்தனை பேர்கள் மாண்டனர்?

(எ) இவ்விபத்துகளைத் தடுக்க சர்க்கார் எடுத்துக்கொண்ட நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : (அ), (இ) & (உ) : சபைமுன் விவர "அறிக்கை" [a] ஒன்று வைக்கப்பட்டுள்ளது.

திரு. வி. கே. கோதண்டராமன் : சார் இந்த விவர அறிக்கையில் 1960-ல் இருந்து 1966 வரை 6,634 விபத்துக்கள் ஏற்பட்டிருப்பதாகவும் 1,166 பேர்கள் மாண்டதாகவும் கூறப்படுகிறது. இதைத் தடுப்பதற்காக இதில் 7 அம்சங்களைக் கொண்ட ஒரு அறிக்கையும் உள்ளது. இதை வைத்து இதுவரையில் எந்தவிதத்திலும் இந்த விபத்துகளைத் தடுக்கக் கூடிய அளவுக்கு ஏதும் நடக்கவில்லையே, ஆகவே ஜனத்தொகையைக் குறைக்கக்கூடிய தன்மையில் இந்த விபத்துக்கள் தொடர்ந்து ஏற்பட வேண்டும் என்ற திட்டத்தில் அதுவும் ஒன்றா ? அப்படி இல்லையென்றால் இரவு 12 மணிக்கு எந்த லாரி எந்த இடத்துக்குப் போவதாக இருந்தாலும் சரி, அந்தக் குறிப்பிட்ட இடத்திலேயே நின்று அதற்குப் பிறகு காலை 4 மணிக்குத் தொடர வேண்டும் என்ற அடிப்படையில் ஒரு விதி பிறப்பிக்கப்படுமா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : அப்படி முன் இருந்த அரசாங்கம் ஒரு உத்தரவு பிறப்பித்து அதன் காரணமாகப் போக்குவரத்தில் பெரும் இடைஞ்சல்கள் ஏற்படுவதாகவும், வாணிபத்துறையில் பலவித இடுக்கண்கள் ஏற்படுவதாகவும் முறையீடுகள் வந்ததன் காரணமாக அந்தப் பழைய அரசாங்கமே மறுபடியும் திரும்பப்பெற்றுக்கொண்டது. ஆனால் உறுப்பினர் அவர்கள் கூறுவதை மீண்டும் பரிசீலிப்பதற்கு நம் போக்குவரத்து ஆலோசனைக் குழு அதை எடுத்துக்கொள்ளலாம்.

திரு. சொ. கோவிந்தராசன் : தலைவர் அவர்களே, நாள்முழுவதும் 8 மணி நேரம் அல்லது 24 மணி நேரமும், 2, 3 நாட்கள் கூட லாரி டிரைவர்கள் லாரியை ஓட்டுகிறார்கள். இதற்கு அந்த லாரி ஓனர்கள்தான் பொறுப்பாளிகள் என்று தெரியவருகிறது. இந்த விபத்துக்கள் இதனால் தான் அதிகமாக ஏற்படுகிறது. எனவே லாரி டிரைவர்களை ஒரு குறிப்பிட்ட மணி நேரத்துக்குமேல் வேலை வாங்கக்கூடாது என்ற முறையில் சட்டம் இருந்தாலும்கூட அதை மீறிச் செய்கிறார்கள். அதற்கு ஏதாவது நடவடிக்கை எடுக்க அரசு முன் வருமா?

a 127-128-ம் பக்கங்களில் இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.